2020 A/L

PAPER CLASS

அலகு 04

அரசு, அரசாங்கம், அரசியற்கட்சிகள், அழுக்ககுழுக்கள், சிவில் சமூகம்

பகுதி 01

01. நவீன அரசினை விபரிப்பதில் பிழையான கூற்றினை இனங்காண்க.

1. அரசு நிலம், மக்கள், அரசாங்கம், இறைமை என்பவற்றைக் கொண்டுள்ளது.
2. ஒரு அரசு நடைமுறைக்கு வருவது மற்றைய அரசுகள் அதனை ஏற்றுக் கொள்வதிலேயே தங்கியுள்ளது.
3. அளவு, சனத்தொகை அல்லது அரசாங்கத்தின் மாதிரி என்பவற்றின் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் எல்லா அரசுகளும் சமமானவை.
4. ஒரு தேசம் - ஒரு அரசு என்ற தத்துவத்தினையே நவீன அரசு அடிப்படையாகக் கொண்டிருந்தது.
5. அனைத்து மக்களும் அரசின் உறுப்பினர்களாக விளங்கினர்

02. அரசின் படிமுறை வளர்ச்சி வரிசைக்கிரமத்துக்கு மிகவும் பொருத்தமான சேர்மானம் எது?

1. குடும்பம், சமூகம், குலமரபுக்குழு, அரசு
2. சமூகம், குடும்பம், குலமரபுக்குழு, அரசு
3. அரசு, சமூகம், குடும்பம், குலமரபுக்குழு
4. குடும்பம், குலமரபுக்குழு, சமூகம், அரசு
5. குடும்பம்,குலமரபு,அரசு,சமூகம்

03. பின்வருவனவற்றுள் அரசின் இயல்பினைப் பிழையாக வர்ணிக்கும் கூற்றினை இனங்காண்க.

1. ஒழுங்கமைக்கப்பட்ட பலமே அரசு ஆகும்.
2. அரசு என்பது அத்தியாவசியமான ஒரு கேடாகும்.
3. அரசு என்பது சமூக வர்க்கமொன்றின் கருவியாகும்.
4. அரசு என்பது குறிப்பிட்ட தொரு அரசாங்க வடிவமாகும்.
5. எல்லை தாண்டி செயற்படும் முழுமையான தாபனம்

04. அரசை விபரிப்பதில் பிழையான கூற்றினை அடையாளம் காண்க.

1. சமூகத்திற்குப் பொதுவான விடயங்களோடு அது கவனம் கொள்கிறது.
2. அதன் உறுப்புரிமை விருப்பத் தேர்வுக்குரியது.
3. சமூகத்தை நிர்ப்பந்தப்படுத்துவதில் தனியுரிமையைக் கொண்டுள்ளது.
4. முழுச் சமூகத்திற்கும் பெறுமதியான சட்டங்களை இயற்றுகின்றது.
5. புரந்தளவான நோக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது

05. பின்வரும் கூற்றுக்களுள் அரசின் இயல்பை விபரிப்பதற்குப் பொருத்தமற்ற கூற்று எது?

1. அது முழுச்சமூகத்துக்குமாகப் பேசுகிறது.
2. நிர்ப்பந்தப்படுத்தலைப் பிரயோகிப்பதற்கு அதற்குத் தனியுரிமை உண்டு.
3. அது எப்போதும் மனித சமூகத்தில் இருந்து வந்துள்ளது.
4. அதில் உறுப்புரிமை பெறல் வலுக்கட்டாயமானது.
5. மாற்றமடையாத நிரந்தரமான தாபனம்

06. சரியான கூற்றை அடையாளம் காண்க.

1. அரசும் அரசாங்கமும் ஒன்றே.
2. அரசாங்கம் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
3. அரசாங்கத்திடம் இறைமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.
4. அரசாங்கத்தில் உறுப்புரிமை பெறல் கட்டாயமானது.
5. ஆரசினை விட அரசாங்கமே பொதுச்சித்தத்தை பிரதிபலிக்கின்றது

www.kesan.lk
K.S. NIMALRAJ BA

07. அரசுக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அரசானது நிலம், சனத்தொகை, அரசாங்கம், இறைமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.
B. ஏனைய அரசுகளுடன் சமர் புரிவதற்கே மக்கள் அரசை ஒழுங்கமைத்தனர்.
C. அதன் உறுப்புரிமை வலுக்கட்டாயமானதாகும்.
D. அரசுகள் பருமனிலும் அதிகாரத்திலும் வேறுபட்டவையாகும்.

1. B C A 2. C D B 3. D B A 4. D C A

08. அரசோடு தொடர்பான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. சகல சமூகத் தாபனங்களிலும் உயர்ந்து.
B. உறுப்புரிமை விருப்புக்குரியது.
C. நிலம், மக்கள், அரசாங்கம், இறைமை என்பவற்றை உள்ளக்கியுள்ளது.
D. ஒவ்வொரு அரசும் அதன் உத்தியோக ரீதியான பெயரால் அழைக்கப்படுகிறது.

1. A B C 2. B C D 3. A C D 4. A B D

09. அரசுக்கும் சமூகத்துக்குமிடையிலான வேறுபாட்டோடு தொடர்பான சரியான சேர்மானத்தை இனங்காண்க.

A. அரசு அரசியல் முறைமையையும் சமூகம் சமூக முறைமையையும் குறித்து நிற்கின்றன.
B. அரசு இறைமையைப் பெற்றிருப்பினும் சமூகம் அதனைப் பெறவில்லை.
C. சமூகம் அரசைவிடப் பரந்ததாகும்.
D. அரசு சமூகத்துக்கு முந்தியாகும்.

1. A B C 2. B C D 3. A C D 4. A B D

10. அரசுக்கும் ஏனைய சங்கங்களுக்குமுள்ள வேறுபாட்டோடு தொடர்பான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அரசும் ஏனைய அனைத்துச் சங்கங்களும் அந்தஸ்தில் சமமானவையாகும்.
B. அரசின் நோக்கங்கள் ஏனைய சங்கங்களினதை விடப் பரந்தமையாகும்.
C. அரசு இறைமையைப் பெற்றிருப்பினும் ஏனைய சங்கங்கள் அதனைப் பெறவில்லை.
D. அரசின் உறுப்புரிமை வலுக்கட்டாயமானதாயினும் ஏனைய சங்கங்களினது அவ்வாறில்லை.

1. A B C 2. B C D 3. A C D 4. A B D

11. அரசு என்பது – பொருத்தமற்ற கூற்று

1. ஒரு நிச்சயமான ஆள்புலப் பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மக்களாகும்.
2. சமுதாயத்துக்குப் பின்னர் தோன்றியதாகும்.
3. ஏனைய சமூகத் தாபனங்களுள் ஒன்றாகும்.
4. இறைமை அதிகாரத்தைப் பெற்ற ஒரே தாபனமாகும்.

12. அரசு என்பது – பொருத்தமற்ற கூற்று

1. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகமாகம்.
2. தனிப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் சங்கங்களை விட உயர்தன்மை பொருந்தியதாகும்.
3. அரசாங்கத்தின் அரசியல் கரமாகும்.
4. இறைமையின் ஒரே உரித்தானியாகும்.

13. அரசு என்பது – பொருத்தமற்ற கூற்று

1. நிலையான ஆள்புலத்தில் வாழும் மக்களின் ஒரு கூட்டமாகும்.
2. ஒழுங்கமைந்த அரசாங்கத்தினூடாகத் தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கிறது.
3. தேசம், சமூகம், அரசாங்கம் என்பவற்றுடன் ஒத்ததாகிறது.
4. வெளிவாரியான கட்டுப்பாடுகளுக்குட்படுவதில்லை.

www.lkedu.lk
K.S.NIMALRAJ BA

14. மனிதர் அரசைத் தாபித்தமை – பொருத்தமற்ற கூற்று

1. பொது தன்மையை மேம்படுத்துவதற்காகும்.
2. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்காகும்.
3. ஓர் அனைத்துலகச் சமூகத்தை உருவாக்குவதற்காகும்.
4. தேசிய நலன்களை மேம்படுத்திப் பாதுகாப்பதற்காகும்.

15. அரச என்பது – பொருத்தமற்ற கூற்று

1. கட்டாயமற்ற உறுப்பினரைக் கொண்டு ஒழுங்கமைந்துள்ளது.
2. இறைமை அதிகாரத்தைக் கொண்ட ஓர் அலகாகும்.
3. பலவந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குத் தனியுரிமை பெற்றுள்ளது.
4. பலவந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு சட்ட முறையான மரபுரிமையைப் பெற்றுள்ளது.

16. ஓர் அரசின் பிரதான அரசியல் சின்னங்களாவன – பொருத்தமற்ற கூற்று

1. தேசிய கீதம்
2. தேசியக் கொடி
3. அரச இலச்சினை
4. தேசிய விழுமியங்கள்

17. அரசு என்பது – பொருத்தமற்ற கூற்று

1. ஏனைய சங்கங்களுக்கு மத்தியிலுள்ள ஒப்பற்ற ஒழுங்கமைப்பாகும்.
2. அரசாங்கத்தின் கருவியாகும்.
3. கட்டாயமானது அனைத்துலகத் தன்மை பொருந்தியதுமான நிறுவனமாகும்.
4. இறைமை அதிகாரத்தின் தனித்த உரிமையானனாகும்.

18. நவீன கோட்பாடுகளின் படி நவீன அரசின் உருவ அமைவில் பாதிப்புச் செலுத்திய காரணிகளாவன.

A. பயங்கரவாதம்
B. ஐக்கியமாதல்
C. பிரிந்து செல்லுதல்
D. தேசியவாதம்
E. மாற்றம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

19. அரசு என்பது

A. வரையறுக்கப்பட்ட ஓர் எல்லைப்புறத்தினில் வாழும் மக்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் அரசியல் சமூகமாகும்.
B. கிரேக்க காலத்தில் நகர அரசாக முதலில் ஆரம்பமாகியது.
C. பொது நலன்களுக்காகச் செயற்படுதல் என்ற நாமத்துடன் கூடிய விசேட அரசியல் நிறுவனங்களின் தொகுதியைக் கொண்டுள்ளது.
D. சட்டத்தை ஆக்குவதற்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குமான சட்டரீதியான அதிகாரத்தையுடையதாகும்.
E. தாராளவாதிகளால் ஒரு பொதுச்சமூகஸ்தாபனமாகவும் சமதர்மவாதிகளால் வர்க்கக் கருவியாகவும் நோக்கப்படுகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

www.lkedu.lk
K.S. NIMALRAJ BA

20. அரசு என்பது.

A. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த ஒரு சமூகமாகும்.
B. மக்களில் கூட்டு விருப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முகவராகும்
C. கடவுளால் உருவாக்கப்பட்ட உயர் அரசியல் தாபனமாகும்.
D. இறைமை என்ற உயர் அதிகாரத்தின் ஏக உரித்தாளனாகும்.
E. நிலம், மக்கள், அரசாங்கம், இறைமை என்ற அடிப்படைக் கூறுகளைக் கொண்டதாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

21. அரசு என்பது – பிழையான கூற்று

1. விசேட அரசியல் கட்டமைவுகளைக் கொண்ட ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும்.
2. சகல சமூக விஞ்ஞானங்களினதும் மையக் கருவாகும்.
3. பொது நலன்களின் நாமத்தால் ஏனைய சகல சமூகத் தாபனங்களுக்கும் மேலாலுள்ள உயர் அரசியல் தாபனமாகும்.
4. சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளராகும்.
5. தோற்றத்திலும் இயல்பிலும் வேறுபட்டதென வேறுபட்ட சிந்தகாவாதக் குழுவினர்களால் நோக்கப்படுகின்றது.

22. அரசாங்கத்துக்கு பொருத்தமான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அது முழு அரசியல் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
B. அது அரசின் முகவராகும்.
C. அது அரசினால் ஒப்படைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே பெறுகின்றது
D. அதன் உறுப்புரிமை வலுக்கட்டாயமானதன்று.

1. A B C 2. A B D 3. B C D 4. A C D

www.lkedu.lk

23. அரசாங்கத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அரசாங்கம் அரசின் கருவியாகும்.
B. அரசாங்கத்தின் உறுப்புரிமை வலுக்கட்டாயமானது.
C. அரசாங்கத்துக்கு இறைமை அதிகாரம் உண்டு
D. அரசாங்கம் அரசின் அதிகாரத்தை நடைமுறைப் படுத்துகிறது.

1. A B C 2. B C 3. A D 4. D A B

24. அரசாங்கத்துக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அது அரச அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அரசுக்குள்ள நடைமுறைக் கரமாகும்.
B. அதன் வடிவம் அரசுக்கு அரசு வேறுபடும்
C. அதனைக் காலத்துக்கு காலம் மாற்றலாம்.
D. மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய முடியாது.

1. A B C 2. A B D 3. B C D 4. A C D

25. அரசாங்கத்தோடு தொடர்பான சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.

A. அரசின் நடைமுறைக்கரம்.
B. தனது பணிகளைப் பொலிஸ் மற்றும் சிவில் சேவையினூடாக மேற்கொள்கிறது.
C. ஒரு நபரையோ அல்லது நபர்களின் குழுவையோ கொண்டிருக்கலாம்.
D. மாற்ற முடியாதது.

1. A B C 2. B C D 3. A C D 4. A B D

K.S. NIMALRAJ BA

26. அரசாங்கத்தின் பணிகளோடு பொருந்தும் சரியான சேர்மானத்தை இனங்காண்க.

A. பிரசைகளின் உரிமைகளை அடக்குதல்.
B. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல்.
C. தேசியப் பாதுகாப்பையும் அரசியல் சுதந்திரத்தையும் காத்தல்.
D. பிரசைகளுக்கு அடிப்படைப் பொது நலன்களை வழங்குதல்.

1. A B C 2. B C D 3. A C D 4. A B D

27. அரசாங்கம் என்பது – பொருத்தமற்ற கூற்று

1. அரசின் உருவாக்கக் காரணிகளுள் ஒன்றாகும்.
2. அரசின் அரசியல் கரமாகும்.
3. அரசின் நம்பிக்கைப் பொறுப்பாளராகும்.
4. அரசின் விருப்பை நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையமாகும்.

28. ஒரு சனநாயக அரசாங்கத்தின் ஆட்சியாளர்கள் - பொருத்தமற்ற கூற்று

1. மக்களால் நியமிக்கப்படுகின்றனர்.
2. தாம் விரும்பியவாறு பொதுச் சொத்துக்களைக் கையாளும் அதிகாரத்தை அனுபவிக்கின்றனர்.
3. மக்களுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளனர்.
4. மக்கள் அதிகாரத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

29. அரசாங்கம் - பொருத்தமற்ற கூற்று

1. முழுச் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
2. அரசின் விருப்பை நடைமுறைப்படுத்துகிறது.
3. மூன்று நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.
4. சுனநாயகம் சார்ந்ததாகவோ சாராததாகவோ இருக்கலாம்.

30. அரசாங்கம் என்பது – பொருத்தமற்ற கூற்று

1. அரசு என்னும் கப்பலின் மாலுமியாகும்.
2. இறைமையதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அதிகாரம் பெற்ற அரசின் முகவராகும்.
3. அரசின் விருப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாகும்.
4. அரசின் உத்தியோக பூர்வமற்ற எஜமானனாகும்.

31. அரசாங்கம் மக்கள் மீது தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் வழிமுறை- பொருத்தமற்ற கூற்று

1. சம்மதம்
2. பலவந்தம்
3. தண்டனை
4. இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள்

32. அரசாங்கம் என்பது – பொருத்தமற்ற கூற்று

1. சகல மக்களினதும் பொதுச் சித்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது..
2. ஜனநாயக ரீதியானதாகவோ ஜனநாயக ரீதியற்றதாகவோ இருக்கலாம்
3. ஒரு நபரையோ பல நபர்களையோ கொண்டிருக்கும்.
4. அரசின்றியும் இருப்பினையுடையது.

33. அரசாங்கத்தின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் வழி முறைகளாவன – பொருத்தமற்ற கூற்று

1. **அரசியல் யாப்பு**
2. ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ்
3. வலுவேறாக்கம்
4. நீதிப் புனராய்வு அதிகாரம்.

www.lkedu.lk
K.S. NIMALRAJ BA

34. அரசாங்கம் என்பது – பொருத்தமற்ற கூற்று

1. ஜன சமூகத்தை ஆளும் பகுதியாகும்.
2. ஓர் அரசை ஆளும் நபர்களின் குழுவாகும் அல்லது ஒரு நபராகும்.
3. அரசின் இறைமையைப் பிரயோகிக்கும் நிறுவனமாகும்.
4. குடிகள் மீது பலவந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கும் நிறுவனமாகும்.

35. அரசாங்கம் பற்றிய சில வரைவிலக்கணங்களாவன

A. மனித சமூகத்தைக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் நிறுவனமாகும்.
B. மனித சமூகத்தை ஆளும் நிறுவனமாகும்.
C. மனித சமூகத்தை முகாமைப்படுத்தும் நிறுவனமாகும்.
D. அரசாங்கத்தில் பங்கேற்கும் மனிதர்களின் குழுவினைக் கொண்ட ஒரு நிறுவனமாகும்.
E. அரசின் ஆள்புலப் பிரதேசத்தில் வாழும் சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிறுவனமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

36. அரசாங்கம் ஒரு சமூக நிறுவனமாயினும் அது ஏனைய சமூக நிறுவனங்களிலிருந்து வேறுபடுவது.

A. ஆணையதிகாரத்தின் அடிப்படையில் ஒருமையான சட்டங்களை ஆக்குவதற்குள்ள திறனினாலாகும்.
B. சட்டமுறைப்படி குடிகளின் வாழ்வையும் சாவையும் நிர்ணயிப்பதற்குள்ள திறனினாலாகும்.
C. குடிகள் உறுப்பினராயினும் அல்லாவிடினும் அவர் மீது அரச அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குள்ள திறனினாலாகும்.
D. ஏனைய சமூக நிறுவனங்களின் இருப்பினை நிர்ணயிப்பதற்குள்ள திறனினாலாகும்.
E. அரசின் இருப்பு தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்குள்ள திறனினாலாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

www.lkedu.lk

37. அரசாங்கம் தனது அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளாவன

A. அரசாங்கத்தின் அதிகாரம் சட்டமுறையானது என மக்களை நம்பச் செய்வதன் மூலமாகும்.
B. சன்மானம் வழங்குதல் மற்றும் அச்சுறுத்தல் மூலமாகும்.
C. அதிகாரத்தைப் பிரயோகிப்பதன் மூலமாகும்.
D. சுமய மற்றும் ஒழுக்க நம்பிக்கைகளின் மூலமாகும்.
E. தண்டிப்பதன் மூலமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

38. அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளாவன

A. பொலீஸ் மற்றும் சிவில் சேவை
B. அரசியல் யாப்பு
C. வலு வேறாக்கம்
D. தடைகள் சமன்பாடுகள் முறை
E. நீதிப் புனராய்வு அதிகாரம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

39. அரசாங்கத்தின் சில பிரதான பணிகளாவன

A. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துதல்.
B. தேசியப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்
C. தேசிய பொருளாதாரத்தையும் தேசிய பொது நலன்களையும் மேம்படுத்துதல்.
D. பங்கீட்டு நீதியின் படி குடிகளைக் கவனித்தல்.
E. வெளிநாட்டு உறவுகளைக் கொண்டு நடத்துதல்.

K.S. NIMALRAJ BA

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

40. அரசாங்கம் என்பது

A. சமூகத்தின் பொதுச் சித்தத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவர் என்று கருதப்படுகின்றது.
B. சட்ட, நிறைவேற்று, நீதி ஆகிய முத்துறைகளையும் உள்ளடக்கியதாகும்.
C. ஸ்பரிசிக்கக்கூடியதும் புலனீடானதுமாகும்.
D. அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மரபுரிமையாளராகும்.
E. நிரந்தரமற்றதும் காலரீதியான மாற்றத்துக்குட்படுவதுமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

41. அரசாங்கம் என்பது

A. அரசியல் சமூகத்தின் பொது விருப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் முகவராகும்.
B. தனது விருப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு பிரயோகிக்கும் கருவியாகும்.
C. ஜனநாயகரீதியானதாகவோ ஜனநாயக ரீதியற்றதாகவோ இருக்கலாம்.
D. ஒருவரையோ சிலரையோ பலரையோ கொண்டிருக்கலாம்.
E. ஜனநாயக அல்லது ஜனநாயகமற்ற வழிமுறைகளில் மாற்றியமைக்கப்படலாம்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

42. அரசாங்கமானது:

A. சட்டத்தையும் ஒழுங்கையும் தேசிய மட்டத்தில் பிரயோகிப்பதற்குள்ள முறைசார் நிறுவனப் பொறிமுறையாகும்
B. அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைவுகளின் தொகுதியை கொண்டுள்ளது.
C. கூட்டுத் தீர்மானங்களை எடுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாகச் சமூகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பிரயோகிக்கும் நிறுவனமாகும்.
D. பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகளை நடைமுறைப்படுத்தும் தேவை எங்கு, எப்போது ஏற்படுகிறதோ அங்கு இருப்பிலிருக்கும்.
E. சமூக நன்மையின் மேம்பாட்டுக்கு அத்தியாவசியமானதென அராஜசுவாதிகளும் கருதுகின்றனர்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

43. அரசாங்கம் என்பது

A. அரசின் எஜமானனாகும்.
B. அரசின் மூளையாகும்.
C. அரசின் சார்பாக இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்கும் முகவராகும்.
D. அரசின் நடைமுறைக் கரமாகும்.
E. அரசையும் மக்களையும் இணைக்கும் ஊடகமாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

44. அரசாங்கம் என்பது – பிழையான கூற்று

1. அரசின் பொது நலன்களைச் செயற்பாடாக மாற்றும் அரசின் கரமாகும்.
2. சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதாகும்.
3. அரசின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மக்கள் கூட்டமாகும்.
4. அதன் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளது எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
5. மாற்ற முடியாத நிலையானதொன்றாகும்

K.S.NIMALRAJ BA

45. அரசியல் கட்சிகளுக்குப் பொருத்தமான கடமைகளின் சேர்மானத்தைக் காட்டுக.

A. நலன்களின் கூட்டுத்தொகை
B. மக்களின் அதிகாரத்தை அதிகாரிக்கு மாற்றுவது
C. தேர்தல் தொகுதி வாக்காளர்களுக்கு கல்வி புகட்டுதல்
D. சட்டசபையில் பெரும்பான்மையினைப் பராமரிக்க உதவுவது.

1. A B D 2. B C D 3. A B C 4. A C D

46. அமுக்கக் குழுக்களை விபரிக்கும் மிகவும் பொருத்தமான கூற்றினை இனங்காண்க

1. அரச அதிகாரத்தினை கைப்பற்றுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் குழுக்கள்
2. அரசியல் கட்சிகளோடு போட்டியிடுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்.
3. குறிப்பிட்ட நலன்களை வளர்க்க ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்.
4. தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மக்கள் குழுக்கள்

- **அரசியல் கட்சிகள் அமுக்கக் குழுக்கள் தொடர்பான சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாக வாசித்து 47ம் 48ம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

A. நலன்களைத் தெரிவு செய்து குறைத்து மொத்தமாக்குகிறது.
B. பாதுகாத்து முன்னேற்றம் ஒழுங்கமைப்புகள் எனக் கொள்ளப்படுகின்றன.
C. அவற்றின் பன்மைத் தன்மை மேலான அரசியல் அபிவிருத்திகளின் ஒரு அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.
D. அதிகாரத்தினைக் கைப்பற்றுதல் ஒரு நோக்கமல்ல.
E. அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் ஒழுங்கமைப்புகள்
F. ஆளுபவர்களுக்கும் ஆளப்படுவோருக்குமிடையில் நேரடித் தொடர்பினை ஏற்படுத்துகிறது.
G. பொதுக் கொள்கை மீது செல்வாக்கு செலுத்த முயலும் குழுக்கள்.
H. தலைவர்களை ஆட்சேர்த்துப் பயிற்சி வழங்கும் முகவர்களாக செயலாற்றுதல்.

47. அரசியல் கட்சிகளுக்கு பிரயோகிக்க இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க.

1. A B D F 2. C E F G 3. H A F B 4. A E F H

48. அமுக்கக் குழுக்களுக்கு பயன்படுத்தக் கூடிய இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க.

1. C D G H 2. A B E F 3. B C D G 4. D E F G

49. அரசியல் கட்சிகள் தொடர்பான பிழையான கூற்றை இனங்காண்க.

1. ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையே கட்சிகள் தொடர்பை ஏற்படுத்துகின்றன.
2. நவீன கட்சிகள் நிரந்தர ஒழுங்கமைப்புக்களைக் கொண்டவை.
3. தேர்தல்கள் மூலம் கட்சிகள் மக்கள் ஆதரவை நாடுகின்றன.
4. எல்லாக் கட்சிகளும் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

50. அரசியல் கட்சிகளின் பணிகளைக் குறிக்கும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அவை சிக்கலான பொதுஜன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்துகின்றன.
B. அவை மக்கள் மத்தியில் அரசியல் வன்செயலை அதிகரிக்கச் செய்கின்றன.
C. அவை அரசியல் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாக மக்களை அறிவூட்டுகின்றன.
D. அவை எதிர்கால அரசியல் தலைவர்களைப் பயிற்றுவிக்கின்றன.

1. A B C 2. A B D 3. B C D 4. A C D

www.lkedu.lk
K.S. NIMALRAJ BA